திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலையோரங்களிலே அல்லது வனத் துறைக்குக் காலியாக இருக்கக்கூடிய இடங்களிலே யூகலிப்டஸ் மரங்களை நடுவதற்காகப் பேப்பர் மில் அதிபர்கள் முயற்சி எடுத்துச் செய்கிறார்கள். ஆனால் யூகலிப்டஸ் மரங்களை நடுவ தால் நிலத்தடி நீர் வெகுவாக உறிஞ்சப்பட்டு, அது காலியா கிறது. மேலும், அந்த மண் வளம் மிகவும் கெடுகின்றது என்று ஆதாரபூர்வமாக நிரூபித்திருக்கிறார்கள். ஆகவே, யூகலிப்டஸ் மரத்தை நடுவதைப்பற்றி அரசு நங்கு தீவிரமாகச் சிந்தனை செய்து மறு பரிசீலனை செய்யுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது சாலையோரத்திலே நிழல் தரும் மரங்களைக் குறித்த கேள்வி. யூகலிப்டஸ் மரங்களை நிழல் தருவதற்காகச் சாலை ஓரத்திலே நாங்கள் வைப்பதில்லை. சமுதாயக் காடுகளிலே வைக்கிறார்களே என்றால் அதற்குத் தனிக் கேள்வியை மாண்புமிகு வனத்துறை அமைச்சரவர்களிடத் திலே நீங்கள் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்த யூகலிப்டஸ் மரம் இங்கே மட்டுமல்ல ; ஆஸ்திரேலியாவிலே இது தான் மிக முக்கியமாக வருவாய் தரக் கூடிய மரம். இங்கேயும் அது நிலத்தடி நீரை உறிஞ்சி, அதன் மூலமாக அந்த நிலம் பாழ்படுகிறதா இல்லையா என்பதற்கு இரண்டு வேறு கருத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, ஒரு கருத்தை மட்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தார் சாலையாக மாற்றுதல்.

*3781 திரு. கே. அர்ஜுனன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தோப்பூரி லிருந்து போத்தனூர் வழியாக தாரமங்கலம் வரை செல்லும் பேருந்து வழித்தடத்தை தார் சாலையாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது எடுத்துக்கொள்ளப்படும்

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சேலம் மாட்டம், ஓமலூர் வட்ட தோப்பூரிலேயிருந்து போத்தனூர் வழியாகத் தாரமங்கலம் வரை செல்லும்சாலையை மேம்பாடு செய்வதற்காக ஒரு ஒப்பந்தப் புள்ளி

1990 மே 9]

கோரப்பட்டு இருக்கிறது. இந்த ஆறு கிலோ மீட்டர் தூரத்தைப் பராமரிக்க அரசு இந்தப் ஒப்பந்தப் புள்ளியினுடைய முடிவு ஏற்பட்ட பிறகு பணியை மேற்கொள்ளும்.

9-55 மணி

திரு. கே. அர்ஜுனன் : துணைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு அதற்கு முன்பு பஸ் போக்குவரத்து உள்ள சாலைகளை மட்டும் தார் சாலையாக்கும் முன்னுரிமை அளிக்கப் பட்டு வருகிறது. அதை மாற்றி தற்போது பஸ் போக்குவரத்து உள்ள அனைத்து சாலைகளையும் தார் சாலையாக்க முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர் களே, 1984 ஆம் ஆண்டிலிருந்து பஸ் போகிற சாலையை தார் சாலையாக மாற்றுகிற திட்டம் இல்லாமல் முன்பிருந்த அரசு நடந்து இருக்கிறது. இப்போது நாங்கள் 1984, 1985, 1986 என்று தான் வருகிறோம். அப்படி வருகிறபோது வரிசையாக ஒவ்வொரு ஆண்டும் எடுத்து தார் சாலையாக மாற்றிக்கொண்டு வருகிறோம். சில தவிர்க்க முடியாத இடங்களில் இந்த ஆண்டு பஸ் விட்ட இடத்தைக் கூட எடுக்க வேண்டுமென்றால், போட்டே ஆகவேண்டுமென்று விதிவிலக்காக சில இடங்களை மட்டும் தேர்வு செய்து நாங்கள் அப்படி அமைக்கிறோம்.

திரு. கே. அர்ஜுனன் : துணை தலைவர் அவர்களே, சில சாலைகளில் மக்கள் வேண்டுகோளை ஏற்று பஸ்களை விட போக்குவரத்துக் கழகம் முன்வந்தாலும், ஹைவேஸ் டிபார்ட் மெண்டைச் சேர்ந்தவர்கள் சாலைகள் சரியாக இல்லையென்று சொல்கிற காரணத்தால் பஸ்களை விட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் இருக்கிற சாலைகளுக்கு ஹைவேஸ் துறை முன்னுரிமை அளித்து, அவைகளை தார்சாலை யாக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர் களே, நெடுஞ்சாலை துறையில் சாலை சரியில்லை என்றால், சரியாக இல்லையென்று தான் சர்டிபிகேட் கொடுப்பார்கள். பொய் சர்டிபிகேட் எல்லாம் இலாக்கா கொடுக்காது. இரண்டா வது, அப்படிப்பட்ட மக்கள் விரும்புகிற அந்த சாலைகளில் பஸ் விட வேண்டுமென்று சொன்னால், பஸ் விட்ட பிறகு அதைத் தார் சாலையாக மாற்றுவதோ, கப்பிச் சாலையாக மாற்றுவதோ, நிதிநிலைக்கு ஏற்ப அரசு அதை மேற்கொள்ளும்.